அ.வ.எண்.162/2015

நாள். 05.03.2022

<u>பெயர்– பொன்னுசாமி த/பெ.பொன்னன்</u>

<u>பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாட்சியம் சொல்ல எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. செங்கோடன் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். தாவா சொத்து செங்குட்டை கிராமத்திற்க்கு சேர்ந்தது. பெரமாண்டபட்டியில் இருந்து செங்குட்டைக்கு சுமார் 1 கிமீ தாவா சொத்து எட்டிப்பட்டி கிராமத்திற்க்கு சேர்ந்தது என்றால் தெரியாது. தாவா சொத்து அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை. எட்டிப்பட்டியிருந்து பெரமாண்டபட்டி கிராமத்திற்கு சுமார் 5 கிமீ தூரம் உள்ளது. நான் தோட்டத்தில் உள்ளேன். என் தோட்டத்தில் வீடு உள்ளது அந்த கதவு எண் போடவில்லை. எனக்கு 2 ஏக்கரில் தோட்டம் உள்ளது. அந்த சர்வே எண்.329 பட்டா எண்.11 செங்குட்டையில் எனக்கு தோட்டம் இல்லை பெரமாண்டபட்டி கிராமத்தில் தான் தோட்டம் உள்ளது அது செங்குட்டைக்கும் அருகில் உள்ளது. சபாபதி என்பவர் செங்கோடன், துரைசாமி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கிணற்று பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளார். கிணற்றிற்கு எந்த புறத்தில் சபாபதி நிலம் உள்ளது என்றால் மேற்கு புறம். தாவா சர்வே எண் தெரியாது தாவா கிணறு பழனியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என ஆவணத்தின் சொல்லியுள்ளதா என்றால் அவர் அனுபவித்து வருகிறார் ஆவணத்தை நான் பார்க்கவில்லை. கிணற்றிற்கு கிழக்கில் செங்கோடன் நிலம் உள்ளது அந்த நிலம் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் 2 1/4 ஏக்கா் அந்த நிலத்தை பழனியப்பகவுண்டர் வாங்கினாா். பழனியப்பகவுண்டருடைய பத்திரத்தில் கிணற்றில் எவ்வளவு பாகம் உள்ளது என்று பார்த்தேனா என்றால் இல்லை கிணற்றை யாரிடம் வாங்கினாா் என்றால் தெரியாது. பழனியப்பகவுண்டர், சபாபதி அப்பா ரங்சாமியிடம் 1966 ம் ஆண்டில் நிலம் மற்றும் தாவா கிணற்றில் போ் பாதி வாங்கினாா் என்றால் தெரியாது 03.07.1980-ல் ரங்கசாமி தான பத்திரம் மூலமாக சபாபதிக்கு தாவா கிணற்றில் பேர்பாதி பாத்தியம் எழுதிகொடுத்தார் என்றால் தெரியாது. இதுநாள் வரை சபாபதி அவர்களுக்கு ஏற்பட்ட தாவா கிரைய பாதிபாகத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. சபாபதிக்கு தான பத்திரத்தில் கொடுத்தது தாவா கிணற்றிலிருந்து வாய்கால் மூலம் தண்ணீர் எடுத்து வந்து சபாபதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறார் என்றால் தெரியாது. சபாபதிக்கும், பழனியப்பகவுண்டருக்கும் மின் இணைப்பு சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைப்பெற்று வந்தது என்றால் தெரியாது. பழனியப்பகவுண்டருக்கும் தனது வாக்குமூலத்தில் தாவா கிணற்றில் தனக்கு பாதி பாத்தியம் என்றும் சபாபதிக்கு பாதிபாத்தியம் என்று கூறியுள்ளார் என்றால் தெரியாது. சபாபதி அவருக்கு உள்ள பாகத்திற்கு கிணற்று மின் இணைப்பு எண்.188 வாங்கினாா் என்றால் தெரியாது பழனியப்பகவுண்டருக்கு அருடைய பாகத்தில் மின் இணைப்பு எண்.97 பெற்றுள்ளார்களா என்றால் பழனியப்ப கவுண்டா் மின் இணைப்பு வாங்கியது நான் பார்த்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 பழனியப்பகவுண்டரக்கு கிணற்றில் பாதிபாத்தியம் என உள்ளது என்றால் சரிதான் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 11ல் கிணற்றில் பாதி பாத்தியம் சபாபதிக்கு உள்ளது அவர் முழுவதற்கும் மோசடியான பட்டா பெற்றுக்கொண்டாரா என்றால் தெரியாது. பழனியப்பகவுண்டர்மோசடியாக பட்ட பெற்றக்கொண்ட பெயருக்கு முழு கிணற்று பட்டா கொடுக்கப்பட்டியிருப்பினும் அது செல்லாது வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல பட்டா அனுசரித்து பழனியப்பகவுண்டருக்கு முழு பாத்தியம் என்று தவறு என்றால் சரியல்ல எனக்கு 2 பெண் குழந்தைகள் சங்கீதா,சரண்யா,சரண்யா கணவர்பெயர் சொக்கலிங்கம் அந்த சொக்கலிங்கம் செங்கோட்டுவேலுவின் மகன் என்றால் சரிதான் இந்த வழக்கில் அவர் 8ம் பிரதிவாதி அவர் என்னுடைய சம்மந்தி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல நான் என்னுடைய வாக்குமூலத்தில் உறவு முறை தெரிவிக்காமல் சாட்சியம் அளித்துவந்துள்ளேன் என்னுடைய சாட்சியம் பொய் என்றால் சரியல்ல